2005 செப்டம்பர் 22]

11—

துணை மின் நிலையம்

***51226**—**திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் 110 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் 110 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் சுமார் 50 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். மேலும், வர்த்தக நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனை, இவை தவிர சீர்காழி நகரைச் சுற்றிலும் புதிய நகரங்களும் உருவாகி வருகின்றன. அதிக அளவில் விவசாய பம்ப் செட்டுகளும் அமைந்திருக்கின்றன. அதனால் குறைந்தழுத்த மின்சாரம் ஏற்படுவதைத் தவிர்த்திடவும், நகர் முழுவதும் சீரான மின்சாரம் வழங்குவதற்கு ஏதுவாகவும், சீர்காழி நகரில் 110 கே.வி. துணை மின் நிலையத்தை இந்த ஆண்டே அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி பகுதிக்குத் தற்போது வைத்தீஸ்வரன் கோயில் 110/11 கிலோ வாட் மின் நிலையத்திலிருந்தும், அதேபோல அரசூர் 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்தும் மின்சாரம்

வழங்கப்பட்டு வருகிறது. இப்போது சீர்காழி பகுதிக்குத் தேவையான அளவிற்கு, இன்றைக்குக் குறைவில்லாத மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சீர்காழி பகுதிக்கு 3 எம்.வி.ஏ. அளவிற்கு மின்சாரம் தேவைப்படுகிறது. அந்த அளவிற்கு, அங்கே போதிய அளவிற்குத் தேவையான மின்சாரம் இந்த இரண்டு துணை மின் நிலையங்களிலிருந்தும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பெரிய அளவிலே, புதிய மின் இணைப்புக்கான விண்ணப்பங்கள் அந்தப் பகுதியிலே நிலுவையில் இல்லை. அதனால், வருங்காலத்தில் ஏதாவது தேவை ஏற்படும் என்று சொன்னால், அந்தப் பகுதிக்குக் கூடுதல் மின் தேவை ஏற்படுகின்றபட்சத்தில், அதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகரில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைத்திட இயலவில்லை என்றாலும், வருகின்ற நிதியாண்டிலாவது 33 கே.வி. துணை மின் நிலையத்தை சீர்காழி நகர மக்களுக்காக அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி பகுதிக்குத் தேவைப்படுகின்ற அளவிற்கு பக்கத்திலிருக்கின்ற வைத்தீஸ்வரன் கோயில் துணை மின் நிலையம், 110/11 கிலோ வாட் துணை மின் நிலையத்திலிருந்து அங்கே மின்னூட்டிகள், feeder என்று சொல்லக்கூடிய மின்னூட்டிகள் 1 மற்றும் 2–ன்மூலம் மின் விநியோகம் செய்யப்படுகிறது. அதிலிருந்து அந்த மின் மாற்றியினுடைய திறன் 10 எம்.வி.ஏ. அதிலே இப்போது இருக்கின்ற த்குதியின் அளவு 9.33 அளவு அங்கே மின்சாரம் வருகிறது. அதேபோல, மின்னழுத்தச் சீராக்கமும், அந்தப் பகுதியிலே பொதுவாக 6 முதல் 9 சதவிகிதம் இருக்கவேண்டும். அந்த வகையிலே அந்தச் சீராக்கம், அந்தத் துணை மின் நிலையத்திலே 6.9 சதவிகிதமும், 6.7 சதவிகிதமும் இருக்கிறது. ஆகவே, அங்கு மின்னழுத்தக் குறைவிற்கு வாய்ப்பில்லை. அதேபோல, அரசூர் 33/11 துணை மின் நிலையத்திலிருந்தும் அங்கே மின்சாரம் வழங்கப்படுகிறது. அதனுடைய உச்சபட்ச அளவு 7.62 எம்.வி.ஏ. ஆகும். அந்த அளவிற்கும் அங்கே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதோடு மட்டுமல்ல; அந்த அரசூர் துணை மின் நிலையத்தினுடைய மின்னூட்டியின் சீராக்கம்கூட 0.5 சதவிகிதம் அங்கே இருக்கிறது.

2005 செப்டம்பர் 22]

எனவே, இங்கேயிருக்கின்ற புள்ளி விவரக் கணக்கின்படி, அங்கே குறைவான மின்னழுத்தம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதோடுமட்டுமல்ல, கூடுதல் தேவை கேட்டு அங்கே விண்ணப்பங்கள் எதுவும் வரப்பெறவில்லை. எனவே, இன்னும் வருங்காலத்தில் நான் ஏற்கெனவே சொல்லியதுபோல, கூடுதல் தேவைக்காக விண்ணப்பங்கள் வருமேயானால், அதுகுறித்து நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

12—

கால்நடை மருத்துவமனை

***20471—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, செம்பட்டியில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) - ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி, செம்பட்டி அருகில் 2 கி.மீ. தூரத்தில் சமத்துவபுரத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும், 6 கி.மீ. தூரத்தில் ஜம்புரிதிக்கோட்டையில் மற்றொரு கால்நடை கிளை நிலையமும், 3 கி.மீ. தூரத்தில் ஆத்தூரில் ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. இவைமூலம் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சைப் பணிகள் செம்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. ஆதலால், செம்பட்டி கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எறும்பு முதல் எண்ணாயிரம் ஜீவஜந்துகளுக்கும் படி அளக்கிற பரமசிவனையும் மிஞ்சி, இன்றைக்குத் தமிழகத்தை ஆண்டு